# 2.4.4

# சமுகத்தில் அரசியல் வாழ்வில் சிவில் சமுகம்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## சிவில் சமுகம்

சிவில் சமுகமென்பது தற்போதைய ஜனநாயக கோட்பாட்டினுள் மிகமுக்கியம் வாய்ந்த ஒன்றாக காணப்படுகின்றது. இதனை "அரசுக்கு வெளியில் சுயாதீனமான பிரசைகள் தமது பொது நோக்கங்களுக்காக ஒன்றினைந்து ஒற்றுமையாக செயற்படும் சமுக வாய்ப்பாகும்" என வரைவிலக்கணப் படுத்தலாம்.

அரசியல் மற்றும் சிவில் சமுக கோட்பாடுகளில் சிவில் சமுகம் என்பதற்கு காணப்படும் எண்ணக்கரு ரீதியான வரலாற்றினுள் நான்கு அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பழைமை தாராண்மைவாத கருத்துப்படி:

1. இதன்படி சிவில் சமுகம் என்பது அரசுக்கும் குடும்பத்துக்கும் இடையிலான தனி மனித செயற்பாட்டிற்கான வாய்ப்பாகும்.

2. இமானுவல் கான்ட், பிரடரிக் ஹெகல் என்போரின் கருத்துப்படி சிவில் சமுகம் என்பது முதலாளித்துவம் சந்தை பற்றிய பகுதியாகும்

**II. பழம் மாக்சிசவாத கருத்துப்படி**

1. கால்மாக்ஸ் முதலாளித்துவ சமுகத்துக்கு மாற்றீட்டுப் பதமாக சிவில் சமுகம் என்ற பிரயோகத்தை பயன்படுத்தினர்.

2. சிவில் சமுகத்தை சேர்ந்தோர் தமது தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் எமக்கிடையே போட்டியிடுகின்றனர். எனவே தனியாட்கள் ஒன்றினைந்து மற்றையவர் பிரிந்து தனிமையாக தமது தேவைகளை நிறைவேற்றி கொள்ள முடியாதநிலை

Copyright © e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### சங்கம்சார் ஜனநாயகப்படி

அரசியலிருந்து விடுபட்டு தமது பொதுத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் முகமாக சங்கங்களை அமைதத்து செயற்படுத்துவதற்கு ஜனநாயக அரசியல் அமைப்புகளில் செயற்படுவதற்கும் பிரஜைகளுக்கும் உள்ள வாய்ப்பே சிவில் சமுகமாகும்.

### நவ மாக்சியவாதக் கருத்து

இத்தாலிய மாக்சிசவாதியான அந்தோனியோ கிரம்ஸ்கி என்பதற்கு பதிய மாக்சிய பொருளை முன்வைத்தார் அதன்படி சிவில் சமுகம் என்பது அரசுக்கும் பிரஜைகளுக்கும் மத்தியில் நிலவும் சமுக கலாச்சார வாய்ப்பாகும்.

### நவீனமுறையில் சிவன் சமுகம்

ஜனநாயக சமுக அரசியல் செயற்பாட்டு வாய்ப்பாக 1970 -1980 தசாப்தங்களில் சிவில் சமுகம் பற்றிய பொருள் விளக்கம் முன்வைக்கப்பட்டது.

ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க, கிழக்கு ஐரேப்பிய நாடுகளில் நிலவிய எதேட்சதிகாரத்துக்கு எதிராக தோன்றிய ஜனநாயக அரசியல் சமுகங்களில் அரசியல் கட்சிகளுக்கு சமாந்தரமாகவும் மாற்று அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

### அரசறிவியல் சிவில் சமுகத்தின் தேவையும் ஆர்வமும்.

சிவில் சமுக இயக்கங்கள் அரசியல் கட்சிகளுக்கு அப்பால் சமாந்தரமாகவும் அரசியல் செயற்பாடுகள் நடைபெறும் நிறுவனங்களாக உள்ளமை

தொகுப்பு : திருமதி.றஞ்சினி பாலகரன் , அரசறிவியல், ஆசிரியர் (யா/இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , த.தொ.தொ. ஆசிரியர் (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சிவில் சமுகமானது அரசு மற்றும் அரசியல் கட்சிகளிலிருந்து விடுபட்டு சுயாதினமாக செயற்படும் சமுக-அரசியல் பகுதியாக இருத்தல்.

iii. பிரசைகளின் அரசியல் பங்குபற்றலுக்கு அரசியல் கட்சிகளால் வழங்கப்படாத புதிய வாய்ப்புகள் சிவில் சமுகத்தால் கிடைத்தமை.

iv. சுறுசுறுப்பான சிவில்சமுகம் நாட்டின் ஜனநாயகத்தை ஆழப்படுத்த உதவும்.

v. ஒழுங்கமைப்பு மற்றும் பலப்படுத்துதல் என்பவற்றின் மூலம் சிவில் சமுகமானது பிரசைகளைப் பயன்படுத்துவதில் பங்காற்றுதல்.

**வினாவிடை**

1. உலகில் சிவில் சமுகம் பற்றிய எண்ணக்கரு தோற்றம் பெற்ற காலப்பகுதியையும், அது பற்றி கருத்துதெரிவித்த ஒருவரையும் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

2. சிவில் சமுகத்தின் பண்புகள் இரண்டு தருக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

3. சிவில் சமுக எண்ணக்கரு பற்றிய பழம் தாரானவாதக் கருத்து தெரிவித்த அறிஞர்கள் இருவரின் பெயர்களை குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

4. சிவில் சமுகம் பற்றி ஆராய்க?

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk